# வரலாற்றைக் குழப்பும் தமிழ்நாடு ஆளுநர்!

மகாத்மா காந்தியை - தேசப்பிதா காந்தியை படுபாவி கோட்சே ஒரு முறை தான் சுட்டுக் கொன்றான். ஆனால், இன்றைக்கு சங்பரிவாரத்தைச் சேர்ந்த ஆளுநர் உள்ளிட்டவர்கள் மீண்டும் மீண்டும் கொலைசெய்துகொண்டிருக்கிறார்கள். அவருடைய கருத்தியலை, சுதந்திரப் போராட்டத்தில் அவர் ஆற்றிய மகத்தான பங்களிப்பை கொலை செய்துகொண்டிருக்கிறார்கள். நேதாஜி விழாவில் நேதாஜியைப் புகழ்வதில் நமக்கு எந்தக் கருத்து வேறுபாடும் இல்லை. அவரை எந்தப் பாணியில் புகழலாம் என்பது அவர்களுடைய உரிமை.

ஆனால், அங்கே போய் ஏன் மகாத்மா காந்தியை மட்டம் தட்டுவது போல் பேசுகிறார்கள்? அந்த வாக்கியம் என்ன? 'காந்தி நடத்திய சுதந்திரப் போராட்டம் பலன் தரவில்லை.' ஆளுநர் கண்டுபிடிப்பு. ஆளுநர் அவர்களுடைய அற்புதமான கண்டுபிடிப்பு என்னவென்றால் பலன் தரவில்லை. தீர்ப்பு சொல்லிவிட்டார். அவருடைய வாக்கியத்தை நான் அப்படியே சொல்கிறேன்.

காந்தி நடத்திய போராட்டத்தால் பலன் இல்லை.இதனை வரலாற்றாளர்கள் கேட்டால் சிரிப்பார்கள். பல பேருக்குத் தெரியும். அடுத்து காந்தியைக் கொன்றவர்கள். இந்த இரண்டு யுகங்கள் சுதந்திரப்போராட்ட வரலாறு, ஆனால். தனி மனித தீரர்களை, வீரர்களை நம்பி இருந்தது. தனி மனித வீரத்தை மட்டும் நம்பி இந்த வெள்ளையனை விரட்ட முடியாது, சுதந்திரப் போராட்டத்தை ஒரு மக்கள் இயக்கமாக மாற்ற வேண்டும் எனச் சொல்லி, எனக் கருதி அதனை செயல்படுத்திக் காட்டியவர் மகாத்மா காந்தி, அதனால் தான் நேதாஜி அவர்கள் அவரை தேசத்தின் தந்தை என்று கூறினார்.

1920 க்கும் முன்பும் 1920 க்கும் பின்பும், காந்தி துவங்கிய போராட்டங்களுக்குப் பிறகு எவ்வளவு பெரிய எழுச்சி, எவ்வளவு பெரிய மக்கள் இயக்கங்கள். குறிப்பாக 1920 -ல் இருந்து 1942 வரைக்கும் சுதந்திரப் போராட்டத்தை மகத்தான மக்கள் இயக்கமாக மாற்றியது யார்.? காந்தி தலைமையிலான காங்கிரஸ் இயக்கம் அல்லவா?

இதனை மறுத்து ஒரு ஆளுநர் பேசலாமா, பேச்சாளர் பேசலாம், ஒரு ஆளுநர் அரசு சாசனப்படி பதவி ஏற்றவர் இப்படி பேசலாமா.? 1942-க்கு முன்பு நடந்த இயக்கத்தை யார் நடத்தினார்கள்? 1925-இல் ஆர்.எஸ்.எஸ். வந்து விட்டது. ஆர்.எஸ்.எஸ்ஸா நடத்தியது.

1925 இல் இருந்து 1942 வரை மட்டும் அல்ல, 1947 வரை இந்திய சுதந்திரப் போராட்டத்தில் ஆர்.எஸ்.எஸ். சின் பங்களிப்பு என்ன என்பதை ஆளுநர் சொல்லத் தயாரா? இதில் என்ன நியாயம் , மனசாட்சி இல்லாமல் பேசுவது மிகுந்த வருத்தமாக இருக்கிறது.

ஆளுநர் என்பவருக்கு, அந்தப் பதவிக்கு மதிப்பு கொடுத்து நாம் பேச வேண்டி இருக்கிறது. ஆளுநரின் பேச்சைக் கேட்டவுடனே எனக்கு மிகவும் வேதனையாக இருந்தது. காந்தி அவர்களின் பங்களிப்பு இல்லாமல் எப்படி சுதந்திரம் அடைந்தோம். உங்களுக்குத் தான் நேரு பிடிக்காது விட்டு விடுவோம். எப்படி வல்லபாய் பட்டேல் வந்தார். அவருடைய தலைவர் யார், சாவர்க்கரா? சொல்லச் சொல்லுங்கள் பார்ப்போம். காந்தி அவர்கள் தான் வல்லபபாய் பட்டேல் அவர்களின் தலைவர். அவருடைய மரணத்திற்கு யார் காரணம் தெரியுமா? காந்தி அவர்களின் மரணத்திற்கு யார் காரணமோ அந்த படுபாவி கோட்சே தான், வல்லபபாய் பட்டேல் அவர்களின் மரணத்திற்கும் காரணம். அவர் உள்துறை அமைச்சராக இருந்தபோது தன்னுடைய குருநாதரை தனது ஆட்சியில் காப்பாற்ற முடியவில்லையே, என அவர் நொந்து போய் தான் அவருக்கு மாரடைப்பு வந்தது, முதல் மாரடைப்பில் தப்பித்தார், ஆனால் இரண்டாவது மாரடைப்பில் மகத்தான அந்தத் தலைவர் மறைந்தார்.

அவர்களுக்கு காந்தியைப் பிடிக்காது, சுதந்திரப்போராட்டத்தில் ஆர்.எஸ்.எஸ். பங்கேற்றதே இல்லை. அதில் பங்கேற்றுத் தலைமை தாங்கிய திருவுருவம் மக்கள் மனதில் நிலைத்து இருக்கிறது. அதனை உடைக்க வேண்டும். காந்தி மக்கள் மனதில் இருக்கக் கூடாது. அவர்களுக்கு அவர் மீது இவ்வளவு வன்மம் இருப்பதற்கு காரணம் என்னவென்றால், அவர் மத நல்லிணக்கத்துக்காக இருந்தார். அந்த மகத்தான ஸ்ரீராம பக்தர். இந்த நாட்டில் மத நல்லிணக்கம் வேண்டும். எல்லா மதங்களும் சமம் தான் எனச் சொல்லி , அதுவும் கடைசி காலத்தில் அவருடைய விருப்பத்திற்கு மாறாகத்தான் இந்த நாடு மதத்தின் அடிப்படையில் பிளவுபட்டது. அதனை அவர் ஏற்கவில்லை. கடைசி வரை நாட்டின் பிரிவினையை ஏற்காத தலைவர் மகாத்மா காந்தி. அதற்கு உதவியாக இருந்தவர் வல்லபாய் படேல் - வரலாறை எடுத்து படியுங்கள்.

இந்து - முஸ்லிம் ஒற்றுமைக்காக காந்தி நிற்கிறார் என்பதினால் தான் இந்தப் பாவி கோட்சே அவரைக் கொன்றான். அவனுடைய வாக்குமூலத்தை அவனுடைய தம்பி கோபால் கோட்சே தான் வெளியிட்டார். அநேகம் பேர் படித்து இருப்பார்கள். இப்போதும் கிடைக்கும். அதற்குக் காரணம் சொன்னான், இந்த மனிதருக்கு இயற்கையான மரணம் வரக்கூடாது, காரணம் அவர் இந்து முஸ்லீம் ஒற்றுமைக்காக இருந்தார் என்பது தான். அதில் பல்வேறு வார்த்தைகளை அவன் சொல்வான். ஆக, இது தான் காரணம்.



**முனைவர் அருணன்**
('புதிய தலைமுறை'யின் 'நேர்படப் பேசு' விவாதம்)

நான் சொல்லும் இந்தக் காரணங்களை பா.ஜ.க. கட்சி சொல்லட்டும். ஆர்.எஸ்.எஸ். என்கின்ற அமைப்பு சொல்லட்டும். அது அவர்களுடைய உரிமை. அதற்கு நாம் பதில் சொல்லலாம். ஆளுநர் சொல்வது நியாயமா?, அரசியல் சாசனத்தின்படி பதவி ஏற்றுக்கொண்டு வந்தவர் அல்லவா அவர்.

சாம் பிரசாத் முகர்ஜி இந்து மகா சபையின் தலைவராக இருந்தவர். இந்து மகாசபை பற்றியும் அதன் இன்னொரு தலைவராக இருந்த சாவர்க்கர் பற்றியும் நேதாஜி எழுதி இருக்கிறார். 1938-இல் காங்கிரஸ் கட்சியின் தலைவராக நேதாஜி தேர்ந்தெடுக்கப்பட்டார். கம்யூனிஸ்ட் கட்சிகளின் ஆதரவோடு, அப்படி தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் பலரையும் சந்திக்கிறார். அப்போது முஸ்லிம் லீக் கட்சியின் தலைவர் ஜின்னா அவர்களை சந்திக்கிறார். இந்து மகா சபையின் தலைவர் சாவர்க்கரை சந்திக்கிறார்.

அந்தச் சந்திப்பு பற்றி அவர் எழுதி இருக்கிறார். இந்திய அரசியல் சுய சரிதை மாதிரியான நூலில் எழுதி இருக்கிறார். அதில் நான்கே நான்கு வரியை நான் தமிழ் படுத்தி இருப்பதை இங்கே படிக்கிறேன். 'பாகிஸ்தானை அடைவதைப் பற்றித்தான் திரு ஜின்னா சிந்திக்கிறார். இந்திய சுதந்திரத்திற்காக காங்கிரஸோடு சேர்ந்து நிற்பதில் அவருக்கு ஆர்வம் இல்லை. சாவர்க்கரோ சர்வதேச நிலை பற்றி கவலையே படவில்லை. ஏன் என்றால் அப்போது தான் இரண்டாவதுஉலக யுத்தம் ஆரம்பித்து இருக்கிறது. இந்தியாவில் பிரிட்டிஷ் இராணுவத்தில் சேருவதின் மூலம் இந்துக்கள் இராணுவ பயிற்சி பெறலாம் என்பது பற்றி மட்டுமே சிந்தித்துக் கொண்டிருக்கிறார். இவர்களுடனான சந்திப்புக்குப் பிறகு எனக்குள் ஏற்பட்ட முடிவு, முஸ்லிம் லீக்கிடமிருந்தோ, அல்லது இந்து மகா சபையிடமிருந்தோ எதையும் எதிர்பார்க்க முடியாது' இது தான் நேதாஜி அவர்களின் பார்வை.

இன்னும் 1940 இல் அவர் பத்திரிகையில் அவர் கையெழுத்திட்ட தலையங்கம் உள்ளது. அதில் எல்லாம் இந்து மகா சபையினுடைய வகுப்பு வாதம் பற்றி அதனுடைய முஸ்லிம் எதிர்ப்பு பற்றி என்னிடம் நிறைய ஆதாரங்கள் இருக்குகிறது. ஆகவே நேதாஜி பற்றி பேசுவதற்கு சங் பரிவார்க்கு தகுதி கிடையாது. இந்தக் கப்பல் படை எழுச்சி பற்றி எல்லாம் ஆளுநர் பேசியதைப் பார்த்தேன். 1946 பிப்ரவரியில் மும்பையில் துறைமுகத்தில் நின்று கொண்டிருந்த பிரிட்டிஷ் கப்பல் படையில் இந்திய வீரர்கள் எழுச்சி கொண்டு கிளம்புகிறார்கள். கப்பல்களை கைப்பற்றுகிறார்கள். அந்தக் கப்பல்கள் மீது அவர்கள் ஏற்றிய கொடிகள் காங்கிரஸ் கொடி. கம்யூனிஸ்ட் கொடி, முஸ்லிம் லீக் கொடி, இந்த மூன்று கொடிகளை ஏற்றித் தான் அவர்கள் எல்லாம் கிளம்பினார்கள்.

அந்தப் போராட்டத்தை ஆதரித்து மும்பைவீதிகளில் களம் கண்டது , ஆதரவாக பேரணி நடத்தியது கம்யூனிஸ்டுகள், தொழிலாளி வர்க்கம், அப்போதும் ஆர்.எஸ்.எஸ் அந்தப் போராட்டத்தையும் ஆதரிக்கவில்லை. அந்தப் போராட்டத்தைக் கண்டு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் பயந்தது. இரண்டாவது உலக யுத்தத்தில் ஸ்டாலின் தலைமையிலான சோவியத் ரஷ்யா நாசிக் இட்லரின் படையை ஒழித்துக் கட்டி முசோலினியை வீழ்த்தி இந்த உலகத்தைக் காப்பாற்றியது.

அதனால் என்ன ஆனது என்றால் அது பற்றிய மிகப் பெரிய ஒரு எழுச்சி அப்போது நாடு தழுவிய சுதந்திரம் என்பது இயல்பாக வந்து விட்டது. ஏனென்றால் இட்லர் முசோலினியை வீழ்த்தி ஆகி விட்டது. அதனை பிரிட்டன் புரிந்துகொண்டது. இனி இவ்வளவு பெரிய நாட்டை ஆள முடியாது என்று. இந்த கப்பல் படை எழுச்சிக்கு மூல கர்த்தா, மூல காரணம் இந்த நாட்டிலே எழுந்த சுதந்திரப்போராட்ட இயக்கம். அதில் காந்திக்கு பங்கு உண்டு, நேதாஜிக்கு பங்கு உண்டு, கம்யூனிஸ்ட்டுக்கு பங்கு உண்டு, எல்லாம் சேர்ந்து தான் எழுச்சியை உருவாக்கினார்கள். அந்த எழுச்சியை கண்டு தான் அவர்கள் மிரண்டு போய் சுதந்திரத்தைக் கொடுப்பதற்கு முடிவு செய்தார்கள். இப்படித்தான் பேசி இருக்கிறார்கள். நானும் அதனை படித்து இருக்கிறேன்.

வரலாற்றைக் குழப்புவதற்காக நேதாஜியை கொண்டு வந்து இதில் இணைக்கிறார். இதில் காலப்பிழை எல்லாம் உள்ளது. இன்னும் சில ஆவணங்களை எல்லாம் படித்து இருக்கிறேன் என்கிறார். நேதாஜி பற்றிய அனைத்து ஆவணங்களையும் வெளியிடப்போவதாக சொன்ன பா.ஜ.க. மோடி அரசு, ஏன் இது நாள் வரை அதனை வெளியிடவில்லை. 1939-இல் சாவர்க்கர் பிரிட்டிஷ் ஆதரவாளராகத்தான் இருந்தார் என்பதை நேதாஜி அவர்களின் வாக்குமூலம் சொல்கிறது. நீங்கள் போற்றுகின்ற சாவர்க்கரின் லட்சணம் இது தான்!

***

## சென்னை அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில்

# ரூ.5.09 கோடி மதிப்பில் கூடுதல் கட்டமைப்பு வசதிகள்!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!

*சென்னை, ஜன.27-*

*அரும்பாக்கத்தில், 1970 ஆம் ஆண்டு அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை 110 படுக்கை வசதிகளுடன் நிறுவப்பட்டது. இது தற்போது சித்தா, வர்மா, ஆயுர்வேதா மற்றும் யுனானி ஆகிய மருத்துவ சிகிச்சைகளுக்கு 310 படுக்கை வசதிகள் கொண்டுள்ளது.*

*அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியானது 1985 ஆம் ஆண்டு பழனியில் துவங்கப்பட்டு பின் 1993 ஆம் ஆண்டு சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை வளாகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டு தற்போது வரை செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனை இந்திய மருத்துவ முறைக்கான தேசிய ஆணையத்தின் இசைவு பெற்ற தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைகழகத்துடன் இணைந்த கல்லூரி ஆகும். இக்கல்லூரியில் ஐந்தரை ஆண்டுகள் கொண்ட சித்த மருத்துவ பட்டப்படிப்பு பயிற்றுவிக்கப்படுகிறது. ஆண்டுக்கு 60 மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். 3 ஆண்டுகள் கொண்ட பட்டமேற்படிப்பும் பயிற்றுவிக்கப்படுகிறது. இதில் ஆண்டுக்கு 34 மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். இதில் பொது மருத்துவம், குணப்பாடம், நோய்நாடல், குழந்தை மருத்துவம், புற மருத்துவம், வர்மம் மருத்துவம் மற்றும் யோக மருத்துவம் என ஏழு துறைகள் உள்ளது.*

*இக்கல்லூரியில் அமைந்துள்ள பட்டமேற்படிப்பு படிக்கும் மாணவ மாணவியர்களுக்ன விடுதிகளில் 300க்கு அதிகமான மாணவர்கள் தங்கி படித்து வருகின்றனர்.*

*2023-24 ஆண்டுக்கான மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை மாநில நிதி அறிக்கை எண் 27ல் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளில் சென்னை, அரசினர் சித்த மருத்துவக்கல்லூரி பட்டமேற்படிப்பு மாணவிகளுக்கான விடுதிக்கு ரூ.2.59 கோடி மதிப்பீட்டில் கூடுதல் தளத்திற்கான கட்டுமான பணிகள் நடைபெறவுள்ளது.*

*மேலும் சென்னை அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி பட்ட மேற்படிப்பு மாணவர்களின் கல்விசார் பயிற்சி கூடத்தில் ரூ.2.20 கோடி மதிப்பீட்டில் கூடுதல் தளத்திற்கான கட்டுமான பணிகள் நடைபெறவுள்ளது. மேலும், அரசி னர் யுனானி மருத்துவக்கல்லூரியில் மாணவிகளுக்கான விடுதியை ரூ. 15 இலட்சம் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்படுகிறது.*

*இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*

## 2024 - நாடாளுமன்றத் தேர்தல்



### தேர்தல் பணி (வாக்குச்சாவடி) ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டம்!

**மாவட்டச் செயலாளர் பா.மு.முபாரக் அறிவிப்பு!**

நீலகிரி மாவட்டத்திலுள்ள உதகை, குன்னூர், கூடலூர் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளில் தலைமைக் கழக அறிவுறுத்தலின்படி மாவட்ட கழகத்தால் தொடர்புடைய நகர ஒன்றிய - பேரூர் கழக செயலாளர்கள் பரிந்துரையின்பேரில் நியமிக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடி ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டம் கீழ்க்குறிப்பிட்டுள்ள பட்டியலின்படி, தேர்தல் பணி செயலாளரும், சுற்றுலாத்துறை அமைச்சருமான கா.ராமசந்திரன் முன்னிலையில் நடைபெறுகிறது.

கூட்டத்தில் சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் கு.கருணாநிதி (உதகை), பி.டி.பாண்டிச்செல்வன் (குன்னூர்), பல்லவிராஜா (கூடலூர்) ஆகியோர் தலைமைக் கழக பிரதிநிதிகளாக கலந்து கொள்ள உள்ளனர்.

| நாள் / நேரம் | சட்டமன்ற தொகுதி | இடம் வருமாறு |
|---|---|---|
| 30.1.2024 (செவ்வாய்) காலை 11 மணி | 108 - உதகை | மாவட்டக் கழக அலுவலகம், உதகை. |
| 31.1.2024 (புதன்) காலை 11 மணி | 110 - குன்னூர் | விவேக் டூரிஸ்ட் ஹோம் கூட்ட அரங்கம், குன்னூர் |
| 1.2.2024 (வியாழன்) காலை 11 மணி | 109 - கூடலூர் | சாஸ்தாபுரி கூட்ட அரங்கம், கூடலூர் |

மேற்குறிப்பிட்டுள்ள தேதிகளில் நடைபெறும் கூட்டங்களில் அந்தந்த தொகுதிக்குட்பட்ட மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், நகர ஒன்றிய பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள் உள்ளிட்ட அனைவரும் தவறாது கலந்து சிறப்பிக்க வேண்டுகிறேன்.

**பா.மு.முபாரக்**
செயலாளர் - நீலகிரி மாவட்ட தி.மு.க.




தாய் மொழியாம் தமிழ் மொழியைக் காக்க, தங்களது உயிரினை துச்சமெனக்கருதி உயிர் நீத்த மொழிப்போர்த் தியாகிகளுக்கு, வீரவணக்கம் செலுத்திடும் வகையில்,கோவை 35வது வட்டத்தில், அறிஞர் அண்ணா நகர் காவல் செக்போஸ்ட் அருகில், மலர்கள் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது 35 வது வார்டின் மாமன்ற உறுப்பினர் சம்பத்தால் மரக்கன்றுகள் நடப்பட்டது. இந்நிகழ்வில் அவைத்தலைவர் சோ.துரை பாண்டியன் தலைமையில், முன்னாள் கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவையின் துணை அமைப்பாளர் கா.பொன்னரசு, சந்திரலிங்கம், ஆர்.எஸ்.புரம் பூபாலன் முன்னாள் காவல் துணை ஆய்வாளர் மதியழகன், இலக்கிய அணி ரவி முரசு, திருமதி மல்லிகா ஜெகதீசன், விக்னேஷ், ராஜ ராஜேந்திரன், அரிமா கேபினட் செகரட்டரி பூமிநாதன், கண்ணன், சசிகுமார், ராமமூர்த்தி ராம்குமார், வீரப்பன், பால சண்முகம், மோகன்ராஜ், ராதாகிருஷ்ணன், கான்ட்ராக்டர் ராஜன் ஆகியோர் கலந்து கொண்டு முழக்கங்களையும் முழங்கினர்.

# வெறுப்புணர்வைப் பரப்புகிறது பா.ஜ.க.!

### மேற்குவங்க நியாய யாத்திரையில் ராகுல் குற்றச்சாட்டு!

*கொல்கத்தா, ஜன.27-*

*மேற்குவங்கத்தில் இந்திய நீதி பயணம் செய்து வரும் ராகுல் காந்திக்கு காங்கிரஸ் கட்சியினர் உற்சாக வரவேற்பு அளித்தனர்.*



*நாடு முழுவதும், வெறுப்புணர்வு, அநீதி மற்றும் வன்முறையை பா.ஜ.க. ஆர்.எஸ்.எஸ். பரப்பி வருவதாக, காங்கிரஸ் முன்னணி தலைவர் ராகுல்காந்தி குற்றஞ்சாட்டினார்.*

*காங்கிரஸ் முன்னணி தலைவர் ராகுல்காந்தி, மணிப்பூர் முதல் மும்பை வரை நியாய யாத்திரை மேற்கொண்டு வருகிறார்.*

*அசாம் மாநிலத்தின் பல்வேறு இடங்களில் யாத்திரை மேற்கொண்ட ராகுல்காந்தி, தற்போது மேற்கு வங்க மாநிலத்திற்குள் பயணத்தை தொடங்கி உள்ளார்.*

*அப்போது அசாம் மாநில காங்கிரஸ் தலைவர் புபேன் குமார் போரா, மூவர்ண கொடியை மேற்கு வங்க மாநில காங்கிரஸ் தலைவர் அதிர் ரஞ்சன் சவுத்ரியிடம் ஒப்படைத்தார். மேற்கு வங்க மாநிலம், கூச் பெஹொர் வந்த ராகுல்காந்தியை, அம்மாநில காங்கிரஸ் தலைவர் அதிர் ரஞ்சன் சவுத்ரி வரவேற்றார்.*

*அப்போது பேசிய ராகுல்காந்தி, நாடு முழுவதும், வெறுப்புணர்வு, அநீதி மற்றும் வன்முறையை பா.ஜ.க.வும், ஆர்.எஸ்.எஸ். அமைப்பும் பரப்பி வருவதாக குற்றஞ் சாட்டினார்.*

*எனவேதான் நீதி கேட்கும் வகையில், தனது யாத்திரையில் நியாயம் என்ற வார்த்தையை இணைத்ததாக ராகுல்காந்தி கூறினார்.*


**கோயம்புத்தூர் மாநகராட்சி**
பொறியியல் பிரிவு
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
மின்னணு ஒப்பந்தப்புள்ளி (e-tendering)
ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.(e)2/2024 நாள் : 24.01.2024

| வ.எண். | பணியின் விபரம் | மொத்த பணிகளின் எண்ணிக்கை | ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் சமர்ப்பிக்கும் கடைசி நாள் மற்றும் நேரம் | ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் திறக்கும் நாள் மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.33, 34, 45, 52, 69, 78, 79, 83க்குட்பட்ட பகுதிகளில் அபிவிருத்தி பணிகள் செய்தல் | 13 பணி | 12.02.2024 பிற்பகல் 3.00 மணி (As per the Server Clock) | 13.02.2024 மாலை 4.00 மணி (As per the Server Clock) |

மேலும் முழு விபரங்களுக்கு கீழ்கண்ட இணையதள முகவரி மூலம் தெரிந்து கொள்ளலாம். https://tntenders.gov.in ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி, பெரிய கடை வீதி, டவுன்ஹால், கோயம்புத்தூர் - 1. தொலைபேசி எண். 0422 2396026. Email : commr.coimbatore@tn.gov.in

ஆணையாளர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி

வெ.ஆ.எண். 044/செ.ம.தொ.அ/கோவை/நாள் : 25.01.2024




தமிழ்நாடு சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரனை அவரது முகாம் அலுவலகத்தில் பினாங்கு. மலேசியா நாட்டின் சுற்றுலாத்துறை அமைச்சர்கள் சந்தித்து சுற்றுலா வளர்ச்சி குறித்து பேசினர். அப்போது அவர்களுக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களால் வெளியிடப்பட்ட சுற்றுலா கொள்கை புத்தகத்தை வழங்கினார்.